# சிறப்புத் தேவை உள்ளவர்களுக்கான திறன் மேம்பாடு

## உதவி கேட்பது - கழிவறை

## (தண்ணீர் இல்லை, சோப்பு இல்லை)

**நிலை 1- கைகளை கழுவுதல்**

- ஆசிரியர்- பிரதான தண்ணீர் குழாயை மூடி, குழாயில் தண்ணீர் கொட்டவில்லை என்பதை உறுதிபடுத்துங்கள்
- ஆசிரியர் மாணவனை கழிப்பறைக்குச் செல்லும்படி கூறுகிறார் - கைகளை கழுவவும்
- ஆசிரியர் மீண்டும் கூறுகிறார்-(மாணவரின் பெயரை)- கைகளை கழுவவும்
- காத்திருங்கள்
- ஆசிரியர் உள்ளே சென்று பிரச்சனையை அடையாளம் காட்டுகிறார் - ஓ! **இங்கு தண்ணீர் இல்லை** (2 **முறை**) *(சொற்களை கூற முடியாதவர்களுக்கு - பேச்சு & சைகையால்)*
- ஆசிரியர் மாணவனிடம் கூறுகிறார்- உதவி கேட்க பெல் பட்டனை அழுத்தவும்
- ஆசிரியர் மாணவனிடம் கூறுகிறார் - தயவுசெய்து காத்திருங்கள்
- ஆசிரியர் வெளியே சென்று பிரச்சனையை தீர்க்கிறார்
- ஆசிரியர் கழிவறைக்குள் செல்கிறார் & மாணவர் அவள் /அவன் கைகளை கழுவுகிறார்
- எப்படி உதவி கேட்பது என்று ஆசிரியர் விளக்குகிறார்- மணியை அடிக்கவும்

**நிலை 2**

- ஆசிரியர்- பிரதான தண்ணீர் குழாயை மூடி, குழாயில் தண்ணீர் கொட்டவில்லை என்பதை உறுதிபடுத்துங்கள்
- ஆசிரியர் மாணவனை கழிப்பறைக்குச் செல்லும்படி கூறுகிறார் - கைகளை கழுவவும்
- ஆசிரியர் மீண்டும் கூறுகிறார்-(மாணவரின் பெயரை)- கைகளை கழுவவும் *(மாணவர் முழு கதவைத் திறக்கக்கூடாது)*
- காத்திருங்கள்

- ஆசிரியர் வெளியில் இருந்து அறிவுரைகளை வழங்குகிறார்
- ஆசிரியர் மாணவனிடம் கூறுகிறார்- பெல் பட்டனை அழுத்தவும்
- மாணவர் பட்டனை அழுத்துகிறார்- ஆசிரியர் உள்ளே சென்று கதவை மூடுகிறார்
- ஆசிரியர் பிரச்சனையை அடையாளம் காட்டுகிறார்
- மேலே உள்ள நிலை 1 படிகளைப் போலவே

**மேலும் தகவலுக்கு:** **https://togetherfoundationtrust.org/**